செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 225 நாள்: 17/04/17

# பத்திரிக்கை செய்தி

இந்திய அரசு புழக்கத்தில் இருந்த ரூ.500/- மற்றும் ரூ. 1000/- ரூபாய் நோட்டுகள் 09.11.2016 முதல் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று அறிவித்ததை தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வங்கி என்ற வரன்முறைக்குள் இல்லாத காரணத்தினால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க முடியாத சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு அரசாணை எண்.132 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை (சி.எண்.1) துறை நாள்.22.11.2016-ன்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு பயிர் கடன்களை அனுமதித்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளில் பயிர்கடன் பெறும் விவசாய உறுப்பினர்களின் பெயரில் சேமிப்புக் கணக்கு துவக்கப்பட்டு ரொக்க தொகையினை இந்திய ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியின் 08.02.2017 தேதிய சுற்றறிக்கையில் 13.03.2017 முதல் வங்கிகளில் தனி நபர் சேமிப்பு கணக்கிலிருந்து பணம் எடுக்கும் உச்ச வரம்பினை முற்றிலுமாக தளர்த்தியதின் அடிப்படையில் விவசாயிகளின் நலன் கருத்தில் கொண்டு 01.04.2017 முதல் விவசாயிகளுக்கு தற்போது உறுப்பினர்களாக உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விவசாய பயிர்கடன் வழங்கப்பட வேண்டும் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விவசாய உறுப்பினர்கள் பயிர்கடன்கள் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பதிவாளர்
வேலூர் மண்டலம்

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்.

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.